6.நன்றிப் பாடல்
(இறையூற்று---136)

எந்தன் உள்ளம் வந்த தேவனே
நன்றியோடு என்றும் பாடுவேன் -2 (2)
இறைவா -5
உன்னையன்றி யாரைப் பாடுவேன்
நன்றி மலர் உனக்குச் சூடுவேன்

உன் பாதை நான் செய்யும் பயணங்களில்
தடைகோடி வரும்போது
எனைத் தாங்கினாய் (2)
உனைப்போல நான்
வாழத் துடிக்கின்ற வேளை -2
கரம் நீட்டி ஒளிகாட்டித் துணையாகிறாய்
அஞ்சாதே நெஞ்சோடு உனில் வாழவே -
உன்னையன்றி ...

எனைச் சூழ்ந்த இருளெல்லாம் ஒளியாக்கினாய்
அருள் தந்து என் வாழ்வின் வழியாகினாய் (2)
கரைந்தோடும் படகாகத் தவிக்கின்றபோது -2
கலங்கரை விளக்காகச் சுடர்வீசினாய்
உயிராக உணவாக உறவாகவே - உன்னையன்றி
...

இந்த படல்களளின் MP3 வடிவம்
www.tamilcatholicnews.com எமது
இனணயத்தளத்தகில பதிவிறக்கம்
செய்யலாம்

7.மாதா பாடல்

நாதத்தின் இனிமையில் பண்பாடுவோம்
எந்நாளுமே அன்னையின் புகழ்பாடுவோம்
நெஞ்சத்தில் நிறைந்திடும் நல் அன்னைக்குப்
புகழ்ப்பாக்கள் பாடிடுவோம்
ஆ அன்னையே வாழ்க
அருளால் நிறைந்த அன்னையே நீ வாழ்க

இறைவனின் திருவுளத்தை
நிறைவேற்றிட மனமுவந்தாய் - என்றும்
மறைபுகழ் உன் வழி இறையுளம் அறிந்திட
குறையின்றிக் காத்திடுவாய்

தரணிக்குத் தாயானாய் - திருத்
தாய்மையைப் பாடுகின்றோம் - என்றும்
திருவாம் இயேசுவின் அன்பர்கள் ஆகிடத்
தாயே உன் அருள் தாராய்

# உயித்த ஞாயிறு
# திருப்பலிப் பாடல்கள்
# ஏப்பிரல் 2017

*1.*வருகைப் பாடல்
(இறையூற்று---24)

திருக்குலமே எழுந்திடுக
அருள் பொழியும் பலியினிலே
ஒருங்கிணைவோம் கரம் குவிப்போம்
உன்னதரைப் போற்றுவோம் (2)
ஆஹா சந்தோஷம் பெருகிடுதே
அவர் சந்நிதி காண்கையிலே (2)

ஆனந்தமுடனே அவர் திருமுன்னே
கூடிடுவோம் - 2
ஆண்டவரே நம் கடவுள் என்று பாடிடுவோம் - 2
அவரே நம்மைப் படைத்தார் அவருக்கே
சொந்தம் நாம்
அவர் படைப்புகள் நாம் அவர் பிள்ளைகள் நாம்
அவர் மந்தையின் ஆடுகள் நாம்

இன்னிசை முழங்க இறைவன்
வாசல் நுழைந்திடுவோம் - 2
பண்ணிசையோடுஅவரது பீடம்சூழ்ந்திடுவோம் -2
அவரைப் புகழ்ந்திடுவோம் அவர் பெயர்
வாழ்த்திடுவோம்
அவர் நல்லவராம் அவர் வல்லவராம்
அவரன்பே வழிநடத்தும்

2.தியானப் பாடல்
(இறையூற்று--282)

உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் - இந்த
உலகையே உய்த்து விட்டார்

வென்றார் கிறிஸ்து வென்றார் - இன்று
அலகையை வென்று விட்டார் (2)
ஆர்ப்பரிப்போமே ஆனந்திப்போமே
அல்லேலூயா பாடுவோம் (2)

மரணத்தை வென்ற மாவீரன் -2
மனுக்குலம் மீட்ட இறை மைந்தன் -2 (2)
கல்லறை விட்டு உயிர்த்தெழுந்தார்
(அல்லேலூயா-2) 2
கவலைகள் நமக்கு இனி இல்லை (உயிர்த்தார்...)

மரணத்தைக் கண்டும் பயமில்லை -2
மாபரன் இயேசு உயிர்த்து விட்டார் -2 (2)
பேயின் தலையை மிதித்து விட்டார்
(அல்லேலூயா-2) 2
பிணக்குகள் எல்லாம் போக்கிவிட்டார்
(உயிர்த்தார்...)

3,விசுவாச அறிக்கை
(இறையூற்று---255)

வானமும் பூமியும் படைத்தவராம்
கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை சுதன் தூய ஆவியுமாய்
தம்முள் உறவுடன் வாழ்கின்றார்

பரிசுத்த ஆவியின் வல்லமையால்
திருமகன் மரியிடம் மனுவானார்
மனிதரைப் புனிதராய் ஆக்கிடவே
புனிதராம் கடவுள் மனிதரானார்

பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
கல்லறை ஒன்றில் அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
மரணத்தின் மீது வெற்றி கொண்டார்

பரலோகம் வாழும் தந்தையிடம்
அரியணை கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்திலே
நடுவராய்த் திரும்பவும் வந்திடுவார்

பரிசுத்த ஆவியை நம்புகிறோம்
பாரினில் அவர் துணை வேண்டிடுவோம்
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்று
பரிகார வாழ்வில் இணைந்திடுவோம்

திருச்சபை உரைப்பதை நம்புகிறோம்
புனிதர்கள் உறவை நம்புகிறோம்
சரிரத்தின் உயிர்ப்பை மறுவாழ்வை
விசுவாசப் பொருளாய் நம்புகிறோம். ஆமென்

4-காணிக்கைப்பாடல்
(இறையூற்று---77)

அன்போடு வந்தோம் காணிக்கை தந்தோம்
கனிவோடு ஏற்பாய் ஆண்டவரே
உம் பலியோடு சேர்ப்பாய் தூயவனே (2)

பொன்னான வாழ்வை புடமிட்டு வைத்தோம்
பூவாக மணம் வீச வைத்தோம் ஆ ... (2)
புதிரான வாழ்வே எதிரானதாலே -2
பொலிவாகச் செய்வாய் ஆண்டவனே
உம் அருளோடு அணைப்பாய் மாபரனே

அருளான வாழ்வு இருளானதாலே
திரியாக எமை ஏற்றி வைத்தோம் (2)
திரியாகக் கருகி மெழுகாக உருகி - 2
பலியாக வைத்தோம் ஆண்டவனே
புது ஒளியாக மாற்றும் தூயவனே

5.திருவிருந்துப் பாடல்
(இறையூற்று--122)

தெய்வ தரிசனம் தேடும் மனம் தினம்
தேவன் வரவிலே ஜீவன் உருகிடும்
இதைப் பாடாத நாளில்லையே இதைத்
தேடாமல் வாழ்வில்லையே
இறைவா இறைவா என் இதயம் இணைவாய் - 2

வாழ்வு வழங்கும் வல்ல
தேவன் வரவு என்னிலே
வசந்தம் என்றும் வசந்தம்
எந்தன் வாழ்வு தன்னிலே
வானதேவன் வார்த்தை
இங்கு வடிவம் ஆனதே
வானும் மண்ணும் அழிந்த
பின்னும் வாழும் என்னிலே
ஒளியே ஒளியே உலகின் ஒளியே
உயிரே உயிரே உயிரின் உயிரே -
உமைப் பாடாத....

அன்பிற்காக ஏங்கும் நெஞ்சம்
ஆசை ஓய்ந்திடும்
அழிவில்லாத அன்பின்
நேசம் அரவணைத்திடும்
நினைவில் ஆடும் நிழல்கள்
யாவும் நிஜங்களாகிடும்
நீங்கிடாமல் நிறைவின் நேசம்
நிதமும் தொடர்ந்திடும்
ஒளியே ஒளியே உலகின்...